


- வாழ்வோம்

முதலில் நாம் திருந்த வேண்டும்!



படம்: ஆரிஃப் முகமது

07

பேரறிஞர் பேனா

12 ஆண்டுக்கால பா.ஜ.க. ஆட்சியின் மாபெரும் சாதனை என்னவென்று கேட்டால், 'வறுமையை ஒழித்துவிட்டோம்' என்றோ, 'நாட்டில் கல்வி கற்றவர்களை 100 விழுக்காடாக்கிவிட்டோம்' என்றோ, 'சுகாதாரத் தேவைகளைப் பூர்த்திசெய்வதில் தன்னிறைவு அடைந்துவிட்டோம்' என்றோ கூற மாட்டார்கள். 'அயோத்தியில் ராமர் கோயிலைக் கட்டிவிட்டோம்' என்பதைத் தான் அவர்களின் இமாலய சாதனையாகச் சொல்லிவருகிறார்கள்.

ராமர் கோயிலைக் கட்டுவதற்காக, 'ராமஜென்மபூமி தீர்த்த சேத்ரா' என்ற அறக்கட்டளையைத் தொடங்கி, அந்த அறக்கட்டளைக்கு வழங்கப்படும் நன்கொடைகளுக்கு 50 சதவிகித வருமான வரி விலக்கு அளித்து, 1,800 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மூன்று தளங்கள், 392 தூண்களை வைத்து, கோயிலைக் கட்டி முடித்துவிட்டார்கள். சூரியனின் ஒளி நேராக ராமர் சிலையின் நெற்றியில் விழும் வகையில், பிரத்யேக 'சூர்யா திலக்' கண்ணாடி மற்றும் லென்ஸ் அமைப் பெல்லாம் வைத்து, பக்தியை வளர்க்க பல நவீனங்களைப் புகுத்தியிருக்கிறார்கள்.

அந்த பயபக்தியோடு பொதுமக்களும் தினந்தோறும் இலட்சக்கணக்கான ரூபாய் பணம், நகைகளைக் காணிக்கையாகச் செலுத்திவருகிறார்கள். பக்தர்களால் அப்படிச் செலுத்தப்படும் காணிக்கைகள் கையாடல் செய்யப்படுவதாக, சில மாதங் களுக்கு முன்னர் குற்றச்சாட்டு எழுந்தது. சி.சி.டி.வி. கேமராவை மறைத்து, பணத்தைக் கழிவறைகளில் ஒளித்துவைத்து, கையாடல் செய்தது உறுதிப்படுத்தப்பட்டு, சிலர் கைதுசெய்யப்பட்டனர். உலகம் உற்று நோக்கும் வகையில் கட்டப்பட்ட ஒரு கோயிலில், இரண்டே ஆண்டுகளில் இத்தகைய மோசடிகள் நிகழ்ந்தது, பக்தியின் அடிப்படையைக் கேள்விக்குள்ளாக்குகிறது.

*கடவுள் பக்தியின்மீது உண்மையான நம்பிக்கை இருந்திருந்தால், கோயில் பணத்தைக் கையாடல்செய்யும் துணிச்சல் அவர்களுக்கு வந்திருக்காது. ஆனால் அவர்களோ, கடவுளுக்குப் பயப்படாமல் கண்காணிப்பு கேமராவுக்குத்தான் பயந்திருக் கிறார்கள். அப்படியானால், வெகுமக்கள் நம்பிக்கொண்டிருக்கும் பக்தி என்பது உண்மைதானா, அதனை அடுத்தடுத்த தலைமுறைக்கும் கண்மூடித்தனமாகக் கடத்திச்செல்வது அவசியம்தானா என்ற கேள்வியை எழுப்பவேண்டியுள்ளது. அப்படி, 1946-ஆம் ஆண்டிலேயே பேரறிஞர் அண்ணா எழுப்பிய கேள்விதான், **'வழக்கு வாபஸ்'** நாடகம்.*

நீதிமன்றத்தில் நடக்கும் உரையாடல்மூலம் பக்தியையும், அதற்கு மூலகாரணமாக இருக்கிற புராண இதிகாசங்களையும் இனியும் எதற்காகப் பின்பற்ற வேண்டும் என்ற கேள்வியை அனைவரிடத்திலும் கடத்துகிறார் அண்ணா.

மாணிக்கம் செட்டியார் என்பவருடைய மண்டிக்கடையில் குமாஸ்தாவாக வேலை பார்க்கிறார், சிவநேசன். தனது மண்டியில் இருந்து, 10 வீசை கற்பூரங்களை (14 கிலோ) மாதவ முதலியார் மண்டிக்குக் கொடுக்குமாறு சிவநேசனை அனுப்பிவைக்கிறார், மாணிக்கம் செட்டியார். ஆனால் சிவநேசனோ, செல்லும் வழியில் ஆலமரத்தடி சாமியாரின் உபதேசத்தைக் கேட்டு, மூலைக் கோயிலில் கற்பூரத்தைக் கொளுத்தி, அனைவரையும் வழிபடச் செய்கிறார். கற்பூரத்தை சிவநேசன் திருடிவிட்டார் என மாணிக்கம் செட்டியார் வழக்குத் தொடுக்க, நீதிமன்றத்தில் விசாரணை நடைபெறுகிறது.

'தான் திருடன் இல்லை, பக்தர்' என்பதை நிரூபிக்கப் பல வாதங்களை முன்வைக்கிறார் சிவநேசன். பக்திக்காக என்றாலும், மாணிக்கம் செட்டியார் சொத்தை, அவர் அனுமதியில்லாமல் பயன்படுத்தியது சட்டப்படி திருட்டுதான் என்கிறார் நீதிபதி. ஆனால் சிவநேசனோ, "ஆலமரத்தடி சாமியார் சொன்னதைத் தான் நான் செய்தேன், அப்படியானால் அவர் சொன்னதும் தவறுதானே? அவரையும் சேர்த்து தண்டிப்பீர்களா?" என்று கேட்பதுடன், "நான் செய்த இச்செயல் தவறு என்றால், அதற்கு மாணிக்கம் செட்டியாரும் ஒரு காரணம்" என்கிறார்.

அந்த வாரம் வியாழக்கிழமை, மாணிக்கம் செட்டியார் வீட்டில் நடந்த கதாகாலட்சேபத்தில், 'பக்த ராமதாஸ்' நாடகம் நடைபெற்றது. 17-ஆம் நூற்றாண்டில், காட்டுக்குள் கைவிடப்பட்டு இருந்த ராமர் சிலைக்கு, கோயில் கட்ட பொதுமக்களிடம் நன்கொடை திரட்டி, அது போதாமல், அரசு வரிப்பணத்தை சுல்தானின் அனுமதி இல்லாமல் ராமரின் தாசன் பயன்படுத்தினார், அதற்காகச் சிறைத்தண்டனையும் அனுபவித்தார் என்பது 'பக்த ராமதாஸ்' நாடகம். 'ராமதாஸின் பக்தியே பக்தி' என மாணிக்கம் செட்டியார் அப்போது

அண்ணாவின் இந்த நாடகம் எழுதப்பட்டு, முக்கால் நூற்றாண்டைக் கடந்துவிட்டோம். அரச மரத்தைச் சுற்றுவது போன்ற விதவிதமான அறிவிலித்தனங்கள் இப்போதும் தொடரத்தான் செய்கின்றன. அத்தகைய பிற்போக்குத்தனங்களில் இருந்து விடுபட, இன்றும் தேவைப்படுகிறார் அண்ணா.

கூறினார். ஆனால், இப்போது என்மீது மட்டும் வழக்குத் தொடர்வது என்ன நியாயம்? என சிவநேசன் கேட்பது போல நீதிமன்ற உரையாடல் தொடரும்.

இந்த வாதங்களை நீதிபதி ஏற்க மறுத்து, "நீதிமன்றம் சட்டப்படிதான் தீர்ப்பு கொடுக்குமே தவிர, புராணங்களை வைத்து அல்ல" என்பார்.

***நீதிபதி:** பழைய கதையப் பேசாதே... அந்தக் காலம் வேறு, இந்தக் காலம் வேறு.*

***சிவநேசன்:** அப்படிச் சொல்வது சரியா? அந்தக் காலத்திலே ஜனங்கள் நீதி என்று எதை நம்பினார்களோ, அதையேதான் இப்போதும் நம்புகிறார்கள். அந்தக் காலத்திலே, அரச மரத்தைச் சுற்றிவந்தால் கர்ப்பம் தரிப்பார்கள் என்று மக்கள் நம்பினார்கள். இப்போதும் அதை நம்புகிறார்களே? ஒரு தினம், உங்கள் மனைவியார் சுற்றிவந்ததையும் நான் பார்த்தேன். எவ்வளவோ பெரிய பெரிய உத்தியோகஸ்தர்கள் வீட்டு தாய்மார்களும் அரச மரத்தைச் சுற்றுவதைப் பார்த்துள்ளேன்.*

***நீதிபதி:** உன் புராணப் பிரசங்கம் போதும்...*

***சிவநேசன்:** அய்யா என் பேச்சை நிறுத்தும்படி கட்டளையிடுவதைப்போல, நாட்டிலே நடைபெறும் புராணப் பிரசங்கங் களை நிறுத்தியிருந்தால், நான் இன்று கள்வன் என்று குற்றம் சாட்டுப்பட்டு நின்றிருக்க மாட்டேனே? பக்தி உணர்ச்சியில் தானே அந்தக் கற்பூரத்தைக் கொளுத்தினேன்!*

நீதிபதி சிந்திக்கத் தொடங்கி, இடை வேளைக்கு எழுந்துவிடுவார்.

அப்போது, நீதிபதியும் மாணிக்கம் செட்டியாரின் வழக்கறிஞரும் பேசும் காட்சிகள் புராணங்களைத் தோலுரிக்கும். சிவநேசனின் வாதத்தில் உள்ள உண்மையை ஏற்றுக்கொள்வர் இருவரும். குருபக்தி என்ற பெயரில், ஏகலைவனின் விரலைக் காணிக்கையாகக் கேட்ட துரோணாச் சாரியாரின் குரூர புத்தி, பிரகஸ்பதியின் சீடரான சந்திரன், தனது குருவின் மனைவி யான தாராவை அடையும் கதை, திரௌபதி - பாண்டவர்கள் கதை என ஒவ்வொரு புராணக் கதையின் பின்னணியையும் எடுத்துச்சொல்லி, அவற்றைப் புறந்தள்ள வேண்டிய அவசியத்தை வலியுறுத்தி இருப்பார் அண்ணா.

'இந்த மக்களைத் திருத்த வேண்டுமானால், முதலில் நாம் திருந்த வேண்டும்' என நீதிபதி கூற, ஆமாம் என அதனை ஏற்பார் வழக்கறிஞர். இருவரும் தங்கள் சாதிக் குறியீடாக நெற்றியிலே பூசியிருந்த திலகத்தை அழித்துவிடுவர். "இது மட்டும் போதாது, இந்தப் பழைய ஏற்பாடுகளைக் கண்டித்துப் பேச வேண்டும் நாம்" என்பார் நீதிபதி. சிவநேசன் மீதான வழக்கும் வாபஸ் வாங்கப்படும்.

அண்ணாவின் இந்த நாடகம் எழுதப் பட்டு, முக்கால் நூற்றாண்டைக் கடந்து விட்டோம். அரச மரத்தைச் சுற்றுவது போன்ற விதவிதமான அறிவிலித்தனங்கள் இப்போதும் தொடரத்தான் செய்கின்றன. அத்தகைய பிற்போக்குத்தனங்களில் இருந்து விடுபட, இன்றும் தேவைப்படுகிறார் அண்ணா. இப்போதும் தேவைப்படுகின்றன அவருடைய படைப்புகள்.

...தொடரும்

ர.பிரகாசு

தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி, ரிவர்ஸ் கியரில் போய்க்கொண்டிருக்கிறது எனப் புள்ளிவிவரங்களோடு, கழகத் தலைவர் அவர்கள் த.வெ.க. ஆட்சியினை விமர்சனம் செய்திருந்தார். அதற்கேற்ப, சமீபத்திய தகவல்களின்படி, மோட்டார் வாகன உதிரிபாகங்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள், ஏற்கெனவே தமிழ்நாட்டில் முதலீடு செய்யத் திட்டமிட்டிருந்த நிலையில், அவற்றை ஆந்திர மாநிலத்துக்குக் கொண்டு சென்றுள்ளன. ஆட்சி நிர்வாகம் நிலைகுலைந்துள்ளதை, இந்த விவரங்கள் சுட்டிக்காட்டும் நிலையில். சமூக வலைதளங்கள் எங்கும், கடந்த தேர்தலில் வெற்றிபெற்று, தி.மு.க. மீண்டும் ஆட்சிக்கு வந்திருந்தால் என்ன நடந்திருக்கும் எனத் தங்கள் ஆதங்கம் மற்றும் வருத்தங்களைப் பகிர்ந்துவருகின்றனர்.

ரிவர்ஸ் கியர் ஆட்சி... செலவுகளே சாட்சி!

"எப்படியும் இந்த மாதத்தில் 8,000 ரூபாய் கூப்பன் வழங்கப்பட்டிருக்கும். மகளிர் உரிமைத் தொகை 2,000 ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கும். அதை வைத்து, தீபாவளி வியாபாரம் களைகட்டி இருக்கும். தமிழ்நாடு முழுவதுமே ஒரு சிறப்பான பொருளாதாரச் சுழற்சி ஏற்பட்டிருக்கும்.

'நான் முதல்வன்' திட்டம் அடுத்த கட்டத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு, கேட் (GATE) தேர்வுப் பயிற்சி விரிவுபடுத்தப்பட்டு, தமிழ்நாட்டு மாணவர்களின் வேலைவாய்ப்பு - அரசு நிறுவனங்களிலும் சரி, பன்னாட்டு நிறுவனங்களிலும் சரி, உறுதிப்படுத்தப்பட்டிருக்கும்.

தொழில் முன்னேற்றம் ஏற்பட அறிவிக்கப்பட்ட `டைடல் பார்க்'குகள் வேலை துரிதப்படுத்தப்பட்டிருக்கும். மின்சார உற்பத்தி தன்னிறைவு பெற முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கும். பற்றாக்குறைக்கு, வெளிச்சந்தையில் முன்கூட்டியே திட்டமிட்டு, குறைவான விலைக்கு மின்சாரம் கொள்முதல் செய்யப்பட்டிருக்கும். அதனால் மீதமான பணம், தமிழ்நாட்டு மக்களின் வளர்ச்சித் திட்டங்களுக்குப் பயன்படுத்தப்பட்டிருக்கும்.

அரிசி விலை உயர்வு இந்த அளவிற்கு ஆகாமல், தெளிவான முயற்சிகள் எடுக்கப்பட்டு இருந்திருக்கும்" என்று குறிப்பிட்டுள்ளனர். "இப்போது, மக்களிடையே பணப்புழக்கமும் இல்லை. அவர்களின் செலவும் உயர்ந்துவிட்டது. இன்னும் சில நாட்களே இருக்கும் இந்தப் பண்டிகை சமயங்களில்.. கடைவீதிகள் முந்தைய வருடங்களைப் போல நெரிசல் மிகுந்ததாக இல்லை" என்றும் பதிவுசெய்துள்ளனர்.

ஃப்ளாஷ்பேக்



ஓ.சி.எஃப்.
ராஜேந்திரன்



ஆவடி படைத் துறைத் தொழிலக தொ.மு.ச.

1989-ஆம் ஆண்டு, ஆவடி படைத் துறை உடைத் தொழிற் சாலையில் நடந்த தொழிற்சங்கத் தேர்தலில், 'தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவை' சார்பில் வெற்றிபெற்றவர், அன்றைய இளைஞர் அணிச் செயலாளர், இன்றைய கழகத் தலைவர் தளபதி அவர்களைச் சந்தித்து வாழ்த்துப் பெற்றோம். இதில், செயலாளர் எஸ்.சிவலிங்கம் மற்றும் தொழிலாளர்களோடு நானும் கலந்துகொண்டு வாழ்த்துப் பெற்றபோது எடுத்த படம்.

- ஓ.சி.எஃப்.ராஜேந்திரன்,
இலக்கிய அணி அமைப்பாளர், வில்லிவாக்கம் வடக்கு ஒன்றியம்,
அவைத் தலைவர், கொள்ளுமேடு கிளை.

இதுபோன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்பவேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018
வாட்ஸ்அப் எண்: 82204-51520 மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

தெரிந்து கொள்வோம்

1982

குளித்தலை ஆபரணம்!

- ஆம் ஆண்டு, மே 23-ஆம் தேதி குளித்தலையில், கலைஞருக்கு,'சட்டமன்றப் பணி வெள்ளி விழா'பொதுக்கூட்டம் நடைபெற்றது. அந்தப் பொதுக்கூட்டத்தில், கலைஞருக்கு பேரறிஞர் அண்ணா படம் பொறித்த தங்கச் சங்கிலி அணிவிக்கப்பட்டது.'நானே தி.மு.கழகத்திற்கு சொந்தமென்று ஆகிவிட்ட பிறகு, எனக்கு அணிவிக்கப்பட்ட ஆபரணம் மட்டும் எனக்கு எப்படிச் சொந்தமாகும்? அதுவும் கழகத்துக்கே சொந்தமாக வேண்டும்' என அந்த ஆபரணத்தை அங்கேயே தொண்டர்களிடம் ஏலம் விட்டு, கழகத்துக்கு நிதி திரட்டினார் கலைஞர்.



Published and Printed by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034
Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Ph: 044 - 45849900